
# திராவிடத்தால் வாழ்கிறோம்

988

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

142




# உலகப் புத்தொழில் மாநாடு-2025

## உலகளாவிய இலக்கின் முதற்படி!

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

மாநாட்டின் 2 நாட்களில் 72,000-க்கும் மேற்பட்டோர் வருகை புரிந்துள்ளனர்.

8 வெவ்வேறு அரங்குகளில் 429 நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

350 அமைப்புகள் - 45-க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து மாநாட்டில் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டுப் பொருளாதாரம், ஒரு டிரில்லியன் டாலர் அளவுக்கு வளர வேண்டும் என்பது திராவிட மாடல் அரசின் நாயகர் முதலமைச்சர் அவர்களின் கனவு. அதை நனவாக்கும் முயற்சியில் சிறப்பான பங்களிப்பைச் செய்து வருபவை, தமிழ்நாட்டின் புத்தொழில் நிறுவனங்கள்.

மாநில திட்டக்குழு ஆய்வின்படி, கல்வி முறையில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள், தமிழ்நாட்டின் புத்தொழில் சூழலை வலுப்படுத்துவதுடன், நீடித்த புதுமை சார்ந்த வளர்ச்சிக்கான வலிமையான அடித்தளத்தை அமைத்து வருகின்றன.

அந்த அடித்தளத்தை வலிமையாக்கும் வகையில், நாட்டிலேயே முதன்முறையாகப் புத்தொழில் துறைக்கு என உலகளாவிய பங்கேற்பில் பிரமாண்டமான 'தமிழ்நாடு உலகப் புத்தொழில் மாநாடு- 2025'-ஐ நடத்தியுள்ளது, திராவிட மாடல் அரசு.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயல்படுத்தி வரும், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் சார்பில், கோயம்புத்தூரில், 'உலக புத்தொழில் மாநாடு - 2025' கடந்த 09.10.2025 அன்று தொடங்கி 2 நாட்கள் நடைபெற்றது. கொடிசியா வர்த்தக வளாகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

### உலக முதலீட்டாளர்கள்

இந்த மாநாட்டில் 45 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள், 328 சர்வதேச கருத்தாளர்கள் உட்பட, பலர் கலந்துகொண்டனர். இந்தியாவின் முன்னணி நிறுவனங்களான பெரிய முதலீட்டைக் கொண்ட யூனிகார்ன் நிறுவனர்கள், உலகளாவிய முதலீட்டாளர்கள் மற்றும் புதுமையாளர்கள் ஒரே இடத்தில் திரண்ட நிகழ்ச்சியாக அமைந்தது.

750 தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்களின் 1000-த்திற்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகள், 21 நாடுகளின் தனி அரங்குகள், 12 தனியார் நிறுவன அரங்குகள், 8 புத்தொழில் திட்ட அரங்குகள் மற்றும் கோயம்புத்தூர் புத்தொழில் நிறுவனங்களுக்கான தனிப்பட்ட காட்சித் தளங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தமிழ்நாட்டின் வளர்ந்து வரும் தொழில்முனைவு மற்றும் புதுமைச் சூழலை, இந்த மாநாடு சிறப்பாக வெளிக்கொண்டு வந்தது.

மாநாட்டில், தமிழ்நாடு புத்தொழில் சூழல் அமைவு அறிக்கை-2025 (Tamil Nadu Startup EcoSystem Report - 2025) மற்றும் 'Highlights of Startup Vision Report- 2035 for Tamil Nadu' ஆகிய அறிக்கைகளையும் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். தவிர, மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்களுக்குப் புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ், மானியத்துடன் கூடிய அனுமதி ஆணைகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.




### சர்வதேச அளவில் பயிற்சிகள்

தமிழ்நாடு அரசின் 15 துறைகள், ஒன்றிய அரசின் 12 துறைகள் புத்தொழில் சார்ந்த தங்களது திட்டங்களைக் காட்சிப்படுத்தி இருந்தன. தவிர, Google, Meta, PhonePe, Zoho போன்ற சர்வதேச நிறுவனங்களும், மாநில திட்டக்குழுவும் இணைந்து, 11 மேம்பட்ட பயிற்சிகளை அளித்தன. அதன்மூலம் புத்தொழில் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்புகள், வணிகம், மின்னணுத் தொழில்நுட்ப மாற்றம் ஆகியவற்றில் பயனுள்ள வழிகாட்டுதல்கள், தெளிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

முதலீட்டாளர்களிடம் நேரடியாகத் தங்கள் யோசனைகள் மற்றும் திட்டங்களை விளக்கும் வகையில், 500 திட்ட விளக்க அமர்வுகள் நடைபெற்றன. அதன்வழியாக, 250-க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து 130 கோடி ரூபாய் முதலீடு உறுதி செய்யப்பட்டது.

> அடுத்த 10 ஆண்டுகளில் உலக அளவில் புத்தொழில் நிறுவனங்களில் முதல் 20 இடங்களில் தமிழ்நாடு இடம்பெற வேண்டும்.

### புத்தொழில் நிதி உதவி

மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்றுப் பாலினத்தோர் தொடங்கிய 8 புத்தொழில் நிறுவனங்களுக்குப் புத்தொழில் நிதித்திட்டத்தின் கீழ், தலா 5 லட்சம் ரூபாய் என மொத்தம் 40 லட்சம் ரூபாய்க்கான முழு மானியத்துடன் கூடிய அனுமதி ஆணைகளை, முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இவை தவிர, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்தாகின. பிரான்சு நாட்டின் லிங்க் இன்னோவேஷன்ஸ் (Link Innovations), பிலிப்பைன்ஸ் நாட்டின் டெக்ஷேக் (Techshake), ஜெர்மனி நாட்டின் ஆசியா பெர்லின் (Asia Berlin) உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு நிறுவனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்குப் புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், உலகத் தரத்திலான தொழில் வளர் பயிற்சிகளை வழங்குதல் ஆகிய வாய்ப்புகள் உருவாக உள்ளன.

### புத்தொழில் கண்காட்சி அரங்குகள்

தமிழ்நாட்டைச் சார்ந்த புத்தொழில் நிறுவனங்கள், நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்யும் பெண் தொழில்முனைவோர்களின் புத்தொழில் நிறுவனங்கள், மாணவர்களின் புத்தாக்க முயற்சிகள், விண்வெளித் தொழில்நுட்பத் துறை புத்தொழில் நிறுவனங்கள், மேம்பட்ட உற்பத்தித்துறை சார்ந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் எனப் பல்வேறு நிறுவனங்களால் அமைக்கப்பட்டுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகளை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார். தமிழ்நாடு புத்தொழில் நிறுவனங்களுக்குப் பன்னாட்டுச் சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், 21 நாடுகள் பங்கேற்ற பன்னாட்டு அரங்குகளும் இதில் அமைக்கப்பட்டிருந்தன.

### ரூ.100 கோடி இணை நிதியம்

இவை தவிர, இந்த மாநாட்டினைத் தொடங்கி வைத்து, உரையாற்றிய முதலமைச்சர் அவர்கள், 100 கோடி ரூபாய் இணை நிதியம் என்கிற திட்டத்தினை அறிவித்தார். இந்த நிதியத்தின்மூலம், புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யும் நிறுவனங்களில் அரசு முதலீடு செய்யும். அதனால், தமிழ்நாட்டில் தொழில் முதலீட்டு மூலதனம் செய்யும் நிறுவனங்கள் அதிகரிக்கும்.

'தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புதுமைக் கொள்கை' வரைவு அறிக்கையின்படி, அடுத்த 10 ஆண்டுகளில் உலக அளவில் புத்தொழில் நிறுவனங்களில் முதல் 20 இடங்களில் தமிழ்நாடு இடம்பெற வேண்டும். அந்த இலக்கை அடைவதற்கான முதல் படி, கோவையில் இருந்து தொடங்கப்பட்டுள்ளது.

...சாதனை தொடரும்

## ஆர்.எஸ்.எஸ்.பறித்த உயிர்!

கேரள மாநிலம், கோட்டயத்தைச் சேர்ந்த 26 வயது இளைஞர் அனந்து அஜி, அக்டோபர் 9-ஆம் தேதி திருவனந்தபுரத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில், தற்கொலை செய்து கொண்டுள்ளார். தற்கொலைக்கான காரணம் குறித்து, தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "நான் பெண்களாலோ, காதல் தோல்வியாலோ அல்லது கடன் பிரச்சினையாலோ தற்கொலை செய்துகொள்ளவில்லை. ஒரு நபரைத் தவிர, ஒரு அமைப்பைத் தவிர வேறு எவர் மீதும் எனக்கு கோபம் இல்லை. ஆர்.எஸ்.எஸ். தான் அந்த அமைப்பு. ஆர்.எஸ்.எஸ். முகாம்களில் எனக்கு சிறு வயதில் இருந்தே பாலியல் தொல்லை கொடுக்கப்பட்டது. அடித்துத் தாக்கியும் காயப்படுத்தினர்" என்று அதிர்ச்சி தரும் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமல்ல, தன்னைப் போன்றே, குழந்தைகள் பலரும் ஆர்.எஸ்.எஸ். முகாம்களில் பாலியல் கொடுமைகளுக்கு ஆளானதாகவும் அவர் அந்தப் பதிவில் கூறியிருக்கிறார். பாலியல் தொல்லையால், நீண்ட நாட்களாக தீவிர மன உளைச்சலுக்கு ஆளாகி, மனநல மருத்துவ சிகிச்சையும் இவர் எடுத்துள்ளார். எனினும், விரக்தியில் தற்கொலை முடிவை எடுத்துள்ளார். அந்த இளைஞர் வழக்கில், சம்பந்தப்பட்டுள்ள அனைத்து ஆர்.எஸ்.எஸ். பிரமுகர்களையும் கைது செய்ய வேண்டுமென்று, கேரளாவில் பல்வேறு அரசியல் கட்சிகள், அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன. சில மாணவர்களும் அமைப்புகளும் போராட்டங்களில் குதித்துள்ளன.

"பண்பாடு, கலாச்சாரம் என்ற போர்வையில், குழந்தைகள் மனதில் மதவாத நஞ்சை விதைக்கும் ஆர்.எஸ்.எஸ். முகாம்களுக்கு குழந்தைகளை அனுப்பாதீர்... பாலியல் தொல்லைகளிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாப்பீர்..." என்று சமூக வலைதளங்களில் விழிப்புணர்வுப் பதிவுகளையும் பலர் பகிர்ந்துள்ளனர்.

## ப்ளாஷ்பேக்



### தலைவரின் புன்முறுவலும் அரவணைப்பும்...



ஆர்.ராஜ்குமார்

2010-ஆம் ஆண்டில்... தானைத் தலைவர், தமிழர்களின் விடிவெள்ளி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வாழ்த்து பெற்ற மகிழ்வான பொழுதில் எடுக்கப்பட்ட படம். காலை 7 மணிக்கே கோபாலபுரம் சென்றிருந்தேன். பார்வையாளர்களைத் தொடர்ச்சியாகப் பார்த்துக் கொண்டே இருந்தார். நீண்ட நேரம் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென அருகில் அழைத்து, "என்ன?" என்றார். "வாழ்த்து வாங்க வந்தேன், தலைவரே" என்றதும் புன்முறுவலுடன், "பக்கத்தில் வா" என அழைத்துப் படம் எடுக்க வைத்தார். அந்த அரிய வாய்ப்பை நினைத்து, எப்போதும் அகம் மகிழ்வேன்.

– ஆர்.ராஜ்குமார், மாவட்டப் பிரதிநிதி, சென்னை மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பேரறிஞர் அண்ணா கைது!

1962-இல் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை கோரி, கழகம் நடத்திய ஆர்ப்பாட்டம், வேலூரில், பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்றது. 20,000 பேர் ஊர்வலமாக வந்தனர். ஆட்சியர் அலுவலகம் முன் மறியல் செய்த அண்ணா உள்பட கழக நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர். கூட்டத்தைக் கலைக்க, போலீசார் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131